பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 27 சனிக்கிழமை (09-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 163

# மட்டக்களப்பில் புலிகள் உக்கிரத் தாக்குதல்கள்!

## 14 படையினர் உயிரிழப்பு
## ஏராளமான ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 9

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

வியாழக்கிழமை அவர்கள் நடத்திய இரு பெருந் தாக்குதல்களில் மொத்தம் பதினான்கு படையினர் பலியாகினர். அவர்களில் ஒருவர் கப்டனாவார்.

இங்கிரியமடுவெட்டை, கதிரவெளி ஆகிய இடங்களில் குண்டு வீச்சு மத்தியிலும் சுமார் ஒன்றரை மணி நேரம் புலிகள் படையினர் மீது கடுந்தாக்குதல்களை நடத்தினர்.

இந்த மோதல்களின்போது இரண்டு பெரிய மோட்டர்கள் உட்பட ஏராளமான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

மட்டக்களப்பு பகுதியில் வியாழக்கிழமை காலையிலும் மாலையிலுமாக விடுதலைப் புலிகள் இரு வேறு பெரும் தாக்குதல்களை நடத்தினர்.

முதல் சம்பவம் நேற்று முன்தினம் காலை இங்கிரிய மடுவெட்டைப் பகுதியில் நடந்தது.

குடும்பிமலை, கள்ளிச்சை ஆகிய இரு முகாம்களிலும் இருந்து வந்த படையணிகள் இங்கிரியமடு வெட்டையில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைச் சுற்றி வளைக்க முயன்றன. அச்சமயம் அங்கு உக்கிரச் சண்டை மூண்டது. புலிகள் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தனர். அவ்வேளை படையினருக்கு உதவியாக நான்கு பொம்மர்களும், இரு ஹெலிகளும் அப்பகுதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பெருந் தொகை ஆயுதங்களுடன் கொழும்பில் சுவிஸ் இளைஞர் கைது!

கொழும்பு, மே 9

கொழும்பு — ஜா எல பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பல லட்சம் டொலர் பெறுமதியான ஒரு கொள்கலன் அளவு ஆயுதங்களை பொலீஸார் கைப்பற்றினர்.

ஜெனிவாவில் சுங்க அதிகாரியாக முன்னர் பணியாற்றிய — சுவிஸ் நாட்டுப் பிரஜை என்று கூறப்படும் — 40 வயது நபர் ஒருவரால் அவ்வாயுதங்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் —

50 ஆயிரம் சுற்று ரவைகள், 18 தானியங்கி ரைபிள்கள், மற்றும் துப்பாக்கிகள், கைவிலங்குகள், இரசாயனப் பொருள்கள், வாக்கி டோக்கிகள், தொலைநோக்கிக் கருவிகள், பட்டரி சார்ஜர்கள் உட்பட பெருமளவு தளபாடங்கள் அடங்கியிருந்தன.

மேற்படி சுவிஸ் பிரஜை தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது மனைவி இலங்கையைச் சேர்ந்தவர். மூன்று குழந்தைகளுக்கு தாயான இப் பெண் கொழும்பில் கொமேர்ஷல் வங்கியில் பணிபுரிந்து வருகின்றார்.

இது குறித்து மேலும் விசாரணை நடத்த சர்வதேச பொலீஸாரின் [இன்டர்போல்] உதவியை கொழும்புப் பொலீஸார் நாடியுள்ளார்கள் என்றும் இலங்கை வானொலி அறிவித்தது.

## தமிழக சபாநாயகருக்கும் மற்றும் எம்.எல்.ஏக்களுக்கும் நோட்டீஸ்!

### கடும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் தயார்!!

புதுடில்லி, மே 9

சட்டசபைச் செயலாளர் உயர் நீதிமன்றத்தின் ஆணையை ஏற்று செயல்பட வேண்டியது இல்லை என்று தமிழக சட்டசபை நிறைவேற்றிய தீர்மானம், நீதிமன்றத்தை அவமதித்த செயலாகக் கருதப்படுகிறது என்று புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இது குறித்து பூரண விசாரணை ஒன்று நடத்தப்படும் என்றும் உயர் நீதிமன்றம் மேலும் அறிவித்தது.

இந்த விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகும் படி தமிழக சட்டசபைச் சபாநாயகர் மற்றும் உரிமைக் குழுவில் அங்கம் வகிக்கும் எம். எல். ஏக்கள், சட்டசபைச் செயலாளர், சென்னை பொலீஸ் ஆணையாளர், தமிழக அரசு ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்புவது என்றும் புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

தமிழகச் சட்ட சபையின் தீர்மானம் வெளியானதும் உயர் நீதிமன்றம் ஆழ்ந்த அதிர்ச்சி தெரிவித்ததும், இது பற்றி இறுதி முடிவு எடுக்க சட்டமா அதிபரின் உதவியை நாடியதும் தெரிந்தவையே.

இதன்படி உயர்நீதிமன்றத்தில் நேற்று சட்டமா அதிபர் ஆஜராகி, "செயலாளரை அனுப்பவில்லை என்றாலும் தேவையான தகவல்களை தமிழக சட்டசபை கொடுத்து விட்டதால் அது நீதிமன்ற அவமதிப்பு ஆகாது செயலாளர் தகவல் தரத்தான் அழைக்கப்பட்டாரே ஒழிய வாய் மூல சாட்சியத்துக்காக அல்ல"—என்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

ஆனால் உயர் நீதிமன்றமோ—

[illegible] யாவது சட்டசபை அனுப்பி இருக்கலாம். இத்தகைய ஒரு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப ... சேட கோஷ்டி ஆப்பிழுத்த குரங்கின்ரை நிலையிலை என்று சொல்லுங்கோ......!

## மண்டைதீவு பகுதியிலிருந்து தாக்குதல்

மண்டைதீவு கடற் பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்று இரவு 8. 30 மணிக்கு குருநகர், யாழ். கோட்டை, கொட்டடிப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. (உ-15)

## 8 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், மே 9

மட்டக்களப்பு இங்கிரியமடு வெட்டைப் பகுதியை சுற்றி வளைக்க முயன்ற படையினருடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 8 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

மேஜர் சித்தா [கந்தையா விஸ்வலிங்கம் - கிரான்], கப்டன் மயிலன் [குமாரவேல் கணேசராஜா - வெலிக்கந்த], இரண்டாம் லெப்ரினன்ட் விக்னா [சிவலிங்கம் புவனேந்திரராஜா - ஏறாவூர்], 2 ஆம் லெப். கேதாரராஜா [சுப்பிரமணியம் விஜயகுமார் - கிரான்], சுந்தர் சாமித்தம்பி சந்திரசேகரம் - மண்டூர்], சுந்தரலிங்கம் [கிருஷ்ணபிள்ளை உதயகுமார் - மன்னம்பிட்டி], மகிந்தகுமார் [பொன்னையா ராஜன் - கருவேம்பன்கேணி], சாந்தகுமார் [விநாயகமூர்த்தி யோகராஜா - கிரான்] ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர். [ஓ-5]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மே 9

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய இரு தாக்குதல் சம்பவங்களின் போதும் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இராணுவ தளபாடங்களின் விவரம் வருமாறு;-

★ 81 மி. மீ. ஷெல் மோட்டர் — 1
★ அதற்குரிய ஷெல்கள் — 11
★ ஒரு பெட்டி பூஸ்ரர்கள்
★ 60 மி. மீ. ஷெல் மோட்டருக்குரிய பேஸ் பிலேட் — 1
★ ஸ்கோப் — 1
★ 60 மி. மீ, கொமாண்டோ மோட்டர் — 1
★ அதற்குரிய ஷெல்கள் — 3
★ ரி 56 ரகத் துப்பாக்கி — 1
★ நவீன ரகத் துப்பாக்கிகள் — 6
★ ஏ. கே, மகஸீன்கள் — 27
★ ஏ. கே. ரவைகள் — 500
★ நடுத்தர ரவைகள் — 1,100
★ ஜே. ஆர். கிரனேட்டுக்கள் — 2
★ புகைக் குண்டுகள் — 2
★ மற்றம் பல இராணுவத் தளபாடங்கள். [ஒ-5]

## ஜி.சீ.ஈ.(சா) விசேட பரீட்சை முடிவுகள் இன்று வரும்?

யாழ்ப்பாணம், மே 9

யாழ் மாவட்டத்திலிருந்து 1990 ஆண்டுக்கான ஜி சீ. ஈ. [சாதாரண தர] விசேட பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் முடிவுகள் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இன்று அல்லது நாளை அவை இங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு சென்றிருந்த கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி அவற்றை கிளிநொச்சிக்கு எடுத்து வந்துள்ளார்.

1990 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சையும் 1991 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சையும் 1991 டிசம்பரில் நடத்தப்பட்டன என்பதும் —

அவற்றில் 1991 டிசம்பருக்குரிய பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளியாகிவிட்டன என்பதும் தெரிந்தவையே.

1990 விசேட பரீட்சையின் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்குரிய பெறுபேறுகள் நேற்று அங்கு வெளியாகின.

யாழ் மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் இங்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சிறையிலுள்ள தமிழ் மீனவர் அடிப்படை உரிமைமீறல் மனு

### விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்பு

யாழ்ப்பாணம், மே 9

கைது செய்யப்பட்டு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து தமிழரான — மன்னாரைச் சேர்ந்த — இளம் மீனவர் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

கணபதிப்பிள்ளை ஜேசுராஜன் [வயது 20] என்ற இளைஞரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவையே விசாரணைக்கு ஏற்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

( 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை முரசு ஆசிரியரை கைது செய்வதற்குத் தடை!

## உயர் நீதிமன்றம் விதித்தது

புதுடில்லி, மே 9

கோவை மாலைமுரசு ஆசிரியர் எஸ். ரி. சுந்தரைக் கைது செய்யக்கூடாது என்று புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தம்மைக் கைது செய்யும்படி தமிழக சட்டசபை சபாநாயகர் பிறப்பித்த வாரண்டுக்கு எதிராக திரு. சுந்தர் தாக்கல் செய்த மனுவை புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று விசாரித்த பின்னர் அந்த வாரண்டுக்கு எதிராக இடைக் காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

அதேவேளை—

முரசொலி ஆசிரியர் செல்வம் தமக்கு எதிரான கைது வாரண்ட்டை தடை செய்யக் கோரித் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

முரசொலி பத்திரிகையைப் பொறுத்த அளவில் அந்தப் பத்திரிகை ஆசிரியர் உரிமை மீறலுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டால், விஷயத்தை அத்தோடு விட்டுவிடும்படி சட்ட சபை சபாநாயகரைக் கேட்பதாக இரண்டு நீதியரசர்களும் கூறினார்கள்.

என்றாலும் முரசொலி ஆசிரியரின் வழக்கறிஞர், ''சபை நடவடிக்கைகளில் எவை நீக்கப்பட்டது, எவை பிரசுரிக்கப்பட்டது என்று சபாநாயகர் குறிப்பிடாததால் அது உரிமை மீறல் ஆகாது'' என்று வாதித்தார்.

எனினும், முரசொலி ஆசிரியரைக் கைது செய்து கூண்டில் ஏற்றுவதற்காக சபாநாயகர் விடுத்த கைது வாரண்ட்டுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்க உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

BITSMANS
சல்வி நிறுவனம்
மானிப்பாய்.
2 வது பிரிவு 92
O/L
DAY CLASS
(வழமையான Super Crade ஆசிரிய குழுவினால்)
ஆரம்பம்: 12-5-92
செவ்வாய் காலை 8-00
[சி-2293]

உயர்கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி.
யாழ். வெளிவாரி பல்கலைக் கழகத்துக்கான
G. A. Q, Ist Com.
பொருளியல்
தேசிய வருமான சுற்றோட்டம்
திரு. க. கலாசரன்
ஆரம்பம்:-
9—5—1992
[இன்று] 12-00 மணி
(சி/2278)

புலமைப் பரிசில்
ஆண்டு -5
August - 1992
பயிற்சிப் பரீட்சை
மாதத்தின் 2ஆவது 4 ஆவது ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும்
அடுத்த பரீட்சை
10-05-1992
இக் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும்.
Bond — யாழ்ப்பாணம்
Express — இருபாலை
Selin — கோப்பாய்
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — சுன்னாகம்
Vinayahar — ஆனைக்கோட்டை
Bitsmans — மானிப்பாய்
Paarathy — சித்தன்கேணி
National — பண்டத்தரிப்பு
விபரங்களுக்கு:
BOND
யாழ்ப்பாணம்.
[சி-2295]

## விபுலாநந்தர் விழா

யாழ்ப்பாணம், மே 9

விபுலாநந்தர் நூற்றாண்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

யாழ் மாநகர சபையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் விழாவையொட்டி புத்தகக் கண்காட்சி ஒன்றும் நடத்தப்படவிருக்கிறது.

யாழ். நூலகத்தில் நடைபெறும் இவ்விழாவில் கருத்தரங்கு, கவியரங்கம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன. [உ-3]

## மூச்சுத் திணறி மரணமான குழந்தை

யாழ்ப்பாணம், மே 9

நீராட்டிக் கொண்டிருந்த போது மூச்சுத் திணறலுக்குள்ளாகி மரணமானதாகத் தெரிவித்து ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நாவாந்துறையில் நேற்று நண்பகல் 1 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ஆபிரகாம் ஏசுராசா என்ற ஆண் குழந்தையே மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் விசாரணைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. [உ-15]

## நாளை

சுழிபுரம், மே 9

பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தின் ஏற்பாட்டில் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு சுகாதாரம் மற்றும் தலைமைத்துவம் பற்றிய கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன. [ஒ-28]

## மகோற்சவம்

தென். மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் 16 ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். [அ-31]

## இன்று

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று சிவானந்தா அணியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதும். இந்த ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 9

மெய்கண்டதேவர் சிவஞான சைவசித்தாந்த உயர் நிறுவனத்தின் சார்பில் இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் சித்தாந்த உரைகள் நிகழ்த்தப்படவிருக்கின்றன.

சைவசித்தாந்தமணி சைவப் புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை இன்று சிவஞான முனிவர் சிறப்புரையையும்—

மூதறிஞர் சைவப் புலவர் க. சி. குலரத்தினம் உமாபதி சிவாச்சாரியார் சிறப்புரையையும் நிகழ்த்துவர். [ -162]

★ ★ ★

தென்மராட்சி, மே 9

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி வித்தியாலய முன்றலில் இன்று நடைபெறும்.

முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரக் கொத்தணி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரமும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபை விசேட ஆணையாளர் திரு த. நவரத்தினராசாவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கந்தண்ணாவும் கலந்து கொள்வர். [உ-117]

## ஊனமுற்ற இருவருக்கு முச்சக்கர வண்டி

பிறப்பிலேயே ஊனமுற்ற இரு இளைஞர்களுக்கு கடந்த புதன்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் வைத்து முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

1989 ஆம் ஆண்டில் யாழ். சமூக சேவைப் பகுதிக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களில் இருந்து இந்த இருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த அன்ரனி ஜெறாட் [தேவராசா], அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த சிவபாக்கியம் சிவகுமார் ஆகிய இந்த இருவருக்கும் யாழ். பிரதேசச் செயலரும், உதவி அரச அதிபருமான திரு க. குணராஜா முச்சக்கர வண்டிகளைக் கையளித்தார். [இ-51]

## மாணவருக்கு இலவச சீருடை

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு அடுத்த ஆண்டில் இருந்து நாட்டில் உள்ள 42 லட்சம் மாணவர்களுக்கு இலவசமாக சீருடை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

பாடசாலைச் சீருடைக்கான துணி நல்ல தரமானதாக இருக்க வேண்டுமென்று கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

11ஆம் ஆண்டிலிருந்து 13ஆம் ஆண்டு வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு வெள்ளைக் காற்சட்டைக்கான துணி வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## வரணியில் திருட்டு

வரணி, மே 9

வரணி நாவற்காட்டில் வீடு ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. [இ-170]

# யாழ். ஆயருக்கு திங்கள் சிறப்புறு முப்பெருவிழா

## தெற்கு ஆயர்களும் வருவர்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது வெள்ளி, பொன், பவள விழாக்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்நகரில் சிறப்பான முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்று மாலை 4 மணிக்கு யாழ். மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். 150 குருமார் கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கும் நிகழ்ச்சி சிறப்பு அம்சமாக நடைபெறவிருக்கிறது.

அதைத் தொடர்ந்து பேராலயத்தின் திறந்தவெளியரங்கில் விழா நடைபெறும். வண. எஸ். ஏ. மைக்கல் சுவாமிகள் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

இவ் விழாவில் கொழும்பு மேற்றிராணியார் மேதகு நிக்கலஸ் மாக்ஸ், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீன பேராயர் அதி வண. வி. ஜே அம்பலவாணர் உட்படப் பலர் உரையாற்றுவார்கள்.

முப்பெரு விழாவையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

இவ்விழாக்களில் பங்குபற்ற கொழும்பு அதி மேற்றிராணியார் மேதகு நிக்லஸ் மாக்ஸ், காலி மறைமாவட்ட ஆயர் மேதகு டொன் சில்வஸ்டர், குருநாகல் மறைவட்ட ஆயர் மேதகு றேமன் பீரிஸ், அனுராதபுரம் மறைவட்ட ஆயர் மேதகு ஜோய் குணவர்த்தன, மன்னார் மறைவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், மட்டக்களப்பு—திருமலை மறைவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர். [ஒ-3]

## நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

நல்லூரில் கடந்த 2 ஆம் தொடக்கம் 6 ஆம் திகதி வரை — 5 நாட்கள் வெகு விமரிசையாக இடம்பெற்ற 'தமிழிசை விழா' வில் பங்கு கொண்ட, ஒத்துழைத்த அனைவருக்கும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நன்றி தெரிவித்துள்ளது. (ஒ-5)

# பிக்குமார் புலிகளைச் சந்திக்க அரசினால் அனுப்பப்படவில்லை

## சபையில் அமைச்சர் மெண்டிஸ்

கொழும்பு, மே 9

சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்ற பௌத்த பிக்குமார், விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அரசாங்கத்தினால் அனுப்பப்படவில்லை.

பதில் பாதுகாப்பு அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் இப்படிக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் கேள்விக்கு பதில் அளிக்கையில் பதில் பாதுகாப்பு அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 41 பொலீஸாருக்கு பதிலாக விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களை விடுவிக்கவேண்டும் என்று எந்தக் கோரிக்கையும் அரசிடம் விடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். [இ-3]

# வவுனியாவில் மீளக்குடியமர சர்வதேச லயன்ஸ் நிதி உதவி

கொழும்பு, மே 9

வவுனியாவில் மீளக் குடியமர்தல் திட்டத்துக்கு சுமார் 22 லட்சம் ரூபாவை (50 ஆயிரம் டொலர்) லயன்ஸ் கழகங்களின் சர்வதேச நிதியம் வழங்கியுள்ளது.

இத்தகவலை லயன்ஸ் கழக சர்வதேச பணிப்பாளர் லயன் மகிந்த அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் அண்மையில் நடந்த லயன்ஸ் கழக 14 ஆவது வருடாந்த மாநாட்டில் மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச கலந்துகொண்டு நீண்ட சொற்பொழிவு ஒன்றை ஆற்றினார்.

## நினைவு தினத்தையொட்டி

# ஸ்ரீபெரும்புதூர் நோக்கி ராஜீவ் ஜோதி யாத்திரை!

புதுடில்லி, மே. 9

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கை முழக்கங்களை எழுப்பிய வண்ணம் 'ராஜீவ் ஜோதி யாத்திரை, நடத்தப்படவிருப்பதாக அகில இந்திய இளைஞர் இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இந்த யாத்திரை இம்மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகி, ராஜீவ் காந்தி இறந்த தினமான மே மாதம் 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரைச் சென்றடையும் என்று இளைஞர் இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரமேஷ் செனிவாலா நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

பிரதமர் நரசிம்மராவ் ராஜீவ் ஜோதியைக் கையளித்து ராஜீவ் ஜோதி யாத்திரையை புதுடில்லியில் தொடக்கி வைப்பார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்த யாத்திரை ஹரியானா, உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் ஊடாக தமிழ்நாடு — ஸ்ரீபெரும்புதூரைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## மாணவருக்கு உணவு முத்திரை

தென்மராட்சி, மே 9

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான 1991 நவம்பர், 1992 மார்ச் மாதங்களுக்குரிய உணவு முத்திரை அந்தந்தப் பாடசாலைகளில் வழங்கப்படுகிறது. [த-11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் புலிகளின் நடவடிக்கை பூரணமாகத் தடுக்கப்படவில்லை

## மத்திய அமைச்சர் சவான் கூறுகிறார்

பாட்னா, மே 9

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் பூரணமாகத் தடுக்கப்படவில்லை. இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்பும் வரை, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பீஹார் தலைநகர் பாட்னாவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் --இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களா என்று சொல்வது கஷ்டமான காரியமாகும் — என்றும் திரு. சவான் சொன்னார்.

திரு பிரபாகரனை நாடு கடத்தும் விஷயம் தொடர்பான கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில்,

''நாடு கடத்தப்படவேண்டும் என்பதற்கு ஆதரவாக அரசு இருக்கிறது. ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸா எடுத்துள்ள நிலைப்பாடு, அது குறித்து தவறான சமிக்ஞைகளை அனுப்புவதற்கு ஒப்பாக உள்ளது'' — என்று சொன்னார்.

''இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக் கொள்ள விரும்பும் இலங்கை அரசு இது குறித்து சாதகமாக நடந்து கொள்ளும் என நாம் நம்புகின்றோம்'' — என்றும் அமைச்சர் சொன்னார்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்பது மட்டும் அந்த இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வதற்குப் போதுமானதாகாது.

அந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து போதுமான சாட்சியங்கள் சேகரிக்கப்படும் வரை விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்யாது என்றும் திரு. சவான் கூறினார்.

(இ-எ)

### சி. ஐ. டி. விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மே 9

ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கொலை செய்ய சதி முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுவது குறித்து சி. ஐ. டி. பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

[ஒ-த]

### எக்ஸ்ரே கருவி

கொழும்பு, மே 9

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு புதிய எக்ஸ்ரே கருவி அனுப்பி வைக்கப்பட்டு உளளது.

அங்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த எக்ஸ்ரே கருவி பழுதடைந்ததைத் தொடர்ந்தே புதிய கருவி அனுப்பப்பட்டுள்ளது. [ஒ-எ]

## யாழ். எம். பிக்கள்சம்பந்தமான சிங்கள பத்திரிகை செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், மே 9

இனப்பிரச்சினைக்கான சமாதான யோசனைகளுடன் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவுள்ளனர் என 'லங்கா தீப' பத்திரிகையில் வெளியான செய்தி உண்மைக்கு மாறானது என விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' அறிவித்தது.

இந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் — ஈழவர் ஜனநாயக முன்னணியின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளும் தற்போது வெற்றிடமாக உள்ளன என்றும் —

அந்த வெற்றிடங்களுக்குப் புதிதாக உறுப்பினர் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் —

இதனுடன் தொடர்புடைய ஆதார பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'புலிகளின் குரல்' தெரிவித்தது. (ஒ-எ-5)

### புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்கிறதாம்

பொலன்னறுவை மற்றும் தொப்பிகல பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் இன்னும் தொடருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

[இ-எ]

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம்:

## சபாநாயகர் வந்த பின்பே திகதி அறிவிக்கப்படும்

கொழும்பு, மே 9

எதிர்க்கட்சிகள் கூட்டாக, அரசுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் திகதி சபாநாயகர் நாடு திரும்பியதும் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிராக முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள இப் பிரேரணையில், எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அநுரா பண்டாரநாயக்கா, தர்மசிறி சேனநாயக்கா, ரிச்சர்ட் பத்திரான, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன மற்றும் வாசுதேவ நாணயக்கார, ராஜா கொல்லுறே மற்றும் கூட்டணி எம். பிக்கள் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-3]


விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L அடுத்த புதிய பிரிவு

ஆரம்பம்: 14 - 05 - 1992

★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.

★ அலகு ரீதியான வினா - விடை வகுப்புகள் இலவசமாக நடைபெறும்.

★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு மணிநேரம் நடைபெறும்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-2279]



Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி தற்போது

வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25% விசேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

பாட்டா மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா.

30, குமார வீதி, கொழும்பு-1.

[20752]


### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் க. பொன்னையா

திதி: 09—05—1992

நானிலத்தை நீர் பிரிந்து நான்காண்டு மறைந்ததுவே!
நாங்கள் இந்த உம் நினைவால் நாளெல்லாம் -
அழுகின்றோம்!
நீங்கள் என்றும் சாந்தி கொள்ள கிழவி தோட்ட
நாயகனின் பாதத்தை நாம் தொழுதே-
வாழுகின்றோம்.

- குடும்பத்தினர்.

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

[20883]


உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

தமிழ், ஆங்கில - தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள்

புதிய பிரிவு

ஆரம்பம்: 11-05-1992

காலை 8 மணி

[சி-2284]


### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சதாசிவம் தம்பிராசா

தோற்றம்: 24—11—1936

மறைவு: 09—04—1992

அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
நல் நிலைக்கு நமை உயர்த்த
வல்லமையுடன் பணியாற்றி
சொல்லவே பேரும் புகழும்
நல்லதோர் காணி வேண்டி
இல்லம்தனை அமைத்த அப்பாவே!

மும்மக்கள் சீமை செல்ல
தக்கதோர் ஆண் துணையாய்
தன்னொளி தந்த தலைவனே!
சென்று விட்டீர் சிவலோகம் சாந்தி பெற,
நின்றிடுவீர் இதயமதில் நீங்காத ஒளி விளக்காய்!

மனைவி, மக்கள், மருமக்கள்,
ல. திவாகர் (பேரப்பிள்ளை)

19/7, கலைப்புலவர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

[20845]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

அழகிய நல்ல இன பொமனேரியன், அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் இரண்டு மாதம் நிரம்பியவை; பூச்சி நீக்கப்பட்டது. அத்துடன் வேறு பொமனேரியன் நாய்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. ஆனந்தன், அரசடி, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. [20875]

### அம்பாள் திருமண சேவை

பொறியியலாளர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர், கிராம சேவகர், விரிவுரையாளர் ஆகிய மணமக்களுக்கு மணப்பெண் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். [20899]

### இலவச திருமண சேவை

29 வயது, திருவாதிரை, செவ்வாய் 7, சுவிஸில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. வெளியூரும் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமணசேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4831]

39 வயது, விசாகம், விவசாய ஆய்வு பெண் உத்தியோகத்தருக்கும், 34 வயது, அத்தம், CIMA - II உதவிப் பெண் கணக்காளருக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4827)

41 வயது, அனுசம், பிரான்சில் தொழில் புரிபவருக்கு தகுந்த பெண் தேவை. பிரான்ஸ் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4836]

### தேவை

பெண்கள், சிறுவர், சிறுமியர், குழந்தைகளுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள் கிழமை நாட்களில் 2-00 மணியளவில் சந்திக்கவும். வினோபா ரேட் சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [எழிலகம் முன்பாக] [20884]

பிரபல்யமான படப்பிடிப்பு நிலையத்திற்கு பயிலுனர்கள் [Photographic] தேவை. ஆர்வம் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 841, C/o உதயன். [சி/2273]

பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆங்கில அறிவுடைய காசாளர், விகிதர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-5-92க்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு; இல. 840, C/o உதயன். [சி/2272]

### தவறிவிட்டது

05-05-1992 இல் முரசொலி பணிமனைக்கும், இருபாலைச் சந்திக்கும் [டச் றோட்] இடையில் A.S. துஷ்யந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும், பணத்துடன் பேர்ஸ் மற்றும் முக்கிய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து A.S. துஷ்யந்தன், 2 ஆம் வருடம், விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். [4841]

### கச்சான் செய்கை

நவாலியில் கச்சான் பயிர் செய்கையில் அதிக விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

இப் பகுதியில் இவ்வாரம் பெய்த மழையினைத் தொடர்ந்து விவசாயிகள் பலரும் தமது வயல்களில் கச்சான் விதைகளை அதிகளவு விதைத்து வருகின்றனர். [த-100]

## கலை, வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94

### புதிய பிரிவு - II

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. இரட்ணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| வரலாறு | — | திரு. வேலா |

ஆரம்பம்: 09 - 05 - 1992

சனி காலை 7-00 மணி

[சி-2288]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



அமரர்

### சின்னத்துரை துரைலிங்கப்பத்தர்

தோற்றம் 12-03-1932 மறைவு: 21-04-1991

திதி: 10 5-1992


ஆண்டொன்று சென்றதையா - ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றும்,
ஒளிவீசும் தெய்வமாக நிலைத்து நிற்கும்
எங்கள் அன்புத் தந்தையை என்றும் பூஜிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

509, கே. கே எஸ் வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

[20902]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### பண்டிதர் சங்கர-வைத்தியலிங்கனார்

தோற்றம்: 14 — 01 — 1906
மறைவு: 17 — 04 — 1986

### வை. இலட்சுமி காந்தம்

தோற்றம்: 19 — 12 — 1919
மறைவு: 04 — 01 — 1989

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனுமது" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களே! உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இன்று நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தெணி, வல்வெட்டித்துறை. [20871]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### பொன்னையா பாலசுப்பிரமணியம்

தோற்றம்: 28 — 04 — 1936 மறைவு: 10 — 04 — 1992

எங்கள் குடும்பத் தலைவரும், கோண்டாவில் ஞானப்பழனி ஆண்டவர் கோவில் பரிபாலனசபைத் தலைவருமாகிய அமரர் பொ. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

கோண்டாவில்-இருபாலை வீதி,
கோண்டாவில். [20901]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கழுத்தறுப்புக்கு கருத்தேடவா?

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள ஆலஞ்சிப் பொத்தானையில் நடந்த படுகொலைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு முன்னாள் நீதியரசர் தலைமையில் குழு ஒன்றை நியமித்திருக்கிறார் ஜனாதிபதி.

வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காகவும், வெறும் சம்பிரதாயத்திற்காகவுமே விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கொக்கட்டிச் சோலையில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் உயிருடன் புதைக்கப்பட்ட அநியாயம் குறித்து நடந்த விசாரணை முடிவு காத்திரமான பயன் எதையாவது தந்ததா?

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படாமல் இணைந்த நிலையில் வைத்தே ஏனைய அம்சங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும்.

இதற்கு எதிரிடையாக வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு அரசும், சிங்கள அரசியல் பிரதானிகளும் கங்கணம் கட்டி நிற்கின்றனர். அந்த இலக்கை அடைவதற்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களைத் தூண்டி விடுவதற்கான திட்டங்கள் மறைமுகமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த இலக்கும், முயற்சிகளும், மறைமுகச் செயற்பாடுகளும் ஜே. ஆர். அரசினால் ஆரம்பிக்கப்பட்ட "ஜிகாத்" இயக்கத்தில் முளைவிட்டன.

அதன் பின்னர் முஸ்லிம் ஊர்காவல் படை உருவாக்கப்பட்டு, அரசாங்கப்படைகளின் ஆதரவுடனும், நேரடி அனுசரணையுடனும் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டும், அவர்களின் சொந்தக் கிராமங்களில் இருந்து விரட்டப்பட்டும் வருகின்றனர்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கும் தமிழர் பிரதேசங்களைப் பறிப்பதற்கும் அரசாங்கம் முஸ்லிம்களை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது.

ஆலஞ்சிப்பொத்தானைப் படுகொலைகள் அதன் ஓர் அங்கமே. தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோத வைத்துவிட்டு தனது காரியத்தை வெகு சுலபமாகச் சாதிக்கும் சூழ்ச்சியின் நடைமுறைச் செயற்பாடே படுகொலைச் சம்பவங்கள்.

இதனைக் கண்டறிவதற்கு, எடுத்துச் சொல்வதற்கு ஒரு விசாரணைக் குழு தேவை இல்லை!

வேண்டுமானால் முஸ்லிம்களுக்கு ஆதரவாக நின்று, தமிழர்கள் முஸ்லிம்களைத் தாக்குகிறார்கள் என்று பழி சுமத்தி முஸ்லிம் நாடுகள் மத்தியில் ஒரு பிரசாரத்தைச் செய்வதற்கு விசாரணைக் குழு அறிக்கையைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டிருக்கலாம்.

அவ்வாறு செய்வதன் மூலம் முஸ்லிம் நாடுகளிடம் இருந்து அதிக பண உதவியைப் பெற வாய்ப்பும் சாத்தியமும் உண்டாகும் என்றும் உள்ளூர நினைத்திருக்கலாம்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மேன்மேலும் மோதவிட்டு அவர்களாகவே அழிவதற்கு வேறு என்ன புதிய உத்திகளைக் கையாளலாம் என்பதற்குரிய தரவுகளை இந்த விசாரணை மூலம் கண்டறியவும் அரசு முனையலாம்.

படுகொலைகள் குறித்து விசாரணை என்பது வெறும் கண்துடைப்பும், மேலும் தமிழர் முஸ்லிம்களின் கழுத்தறுப்புக்கு புதிய கருப்பொருள்களுக்கான தேடலுமாகும்.

# தூண்டுதலின் பேரிலேயே அகதிகள் தற்போது இலங்கை திரும்புகின்றனர்

## ராமதாஸ் கூறுகிறார்

சென்னை, மே 9

"கடைசியாக இலங்கை திரும்பிய ஆயிரம் அகதிகளும் தூண்டுதலின் பேரிலேயே சென்றனர். தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளை நாடு திரும்புமாறு தூண்டுவதில் சகலவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்."

இப்படிக் கூறியுள்ளார் தமிழ்நாடு வருவாய்த்துறை விசேட ஆணையாளர் திரு சி. என். ராமதாஸ்.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் விவகாரத்துக்கு பொறுப்பாகக் கடமை புரியும் இவர், தமது அதிகாரிகளுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் இது தொடர்பாக வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் ஒரு லட்சத்து 13 ஆயிரம் அகதிகள் இருந்தனர் என்பதும் இவர்களில் 16 ஆயிரம் அகதிகள் மட்டுமே இலங்கைக்கு இதுவரை அனுப்பப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [இ-3]

## 4 மாத காலத்துக்குப் பின் பிறப்புப் பதிவுப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம் மே 9

யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்புப் பதிவுப் பத்திரங்கள் தற்போது மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பத்திரம் கடந்த ஜனவரி முற்பகுதியில் முடிவடைந்த போதிலும் கடந்த நான்கு மாதங்களாக அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்காலப் பகுதிக்குள் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

## தமிழ் சாகித்திய விழாவில் பிரேமா

கொழும்பு, மே 9

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் வியாழன்று தமிழ் சாகித்திய விழா ஆரம்பமானது.

முதல் நாள் ஆரம்ப விழாவில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தமிழ்மொழி அமுலாக்கல், இந்து மத விவகார அமைச்சினால் இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரைவிழா நடைபெறும். [ஒ-எ]

## மா, மற்றும் பெற்றோல் விலை உயராது

கொழும்பு, மே 9

மா மற்றும் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் யோசனை எதுவும் தற்போது அரசுக்கு கிடையாது.

வெளி விவகார அமைச்சரும், நிதி ராஜாங்க அமைச்சருமான ஹறோல்ட் ஹேரத் நாடாளுமன்றத்தில் முன் கண்டவாறு சொன்னார்.

இப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து சுதந்திரக்கட்சி எம். பி. சி. வி. குணரத்தின எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். [இ-எ]

## அதிபர்கள் அலவன்ஸ் அதிகரிப்பு

அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கு அலவன்ஸ் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப பாடசாலை அதிபர்களுக்கு 50 ரூபாவும், இரண்டாம் தரப் பாடசாலை அதிபர்களுக்கு 75 ரூபாவும், மகா வித்தியாலய அதிபர்களுக்கு 100 ரூபாவும், தேசிய பாடசாலை அதிபர்களுக்கு 125 ரூபாவும் அலவன்ஸ் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## பர்தா அணிய ஆப்கன் அரசு உத்தரவு

ஆப்கனிஸ்தானில் இஸ்லாமியப் பெண்கள் பர்தா எனப்படும் முகத்திரை அணிய வேண்டும் என்று இடைக்கால அரசாங்கம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

நாட்டில் மதுபான விற்பனையைத் தடைசெய்யும் உத்தரவு ஒன்றையும் இடைக்கால அரசு பிறப்பித்தது. [இ-எ]

### ராஜீவ் நினைவு தினத்துக்கு முன்

# புலிகளுக்கு தடை விதிக்காவிடில் காங்கிரஸ் போராட்டம் நடத்தும்

## மத்திய அரசுக்கு வாழப்பாடி எச்சரிக்கை

சென்னை, மே. 9

ராஜீவ் காந்தி நினைவு தினமான மே 21க்கு முன்னர் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்படாவிட்டால், தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தும்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இந்த எச்சரிக்கையை மத்திய அரசுக்கு விடுத்துள்ளார்.

போதிய ஆதாரங்கள் கிடைக்கப் பெறாமல் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய முடியாது என்று உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்ததையும் திரு. இராமமூர்த்தி தனது அறிக்கையில் கண்டித்துள்ளார்.

சவானின் அறிவிப்பு ராஜீவ் காந்தியின் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார். [இ 3]

## சோனியா ஆதரவாளர்களே தீர்மானத்துக்கு காரணமாம்

புதுடில்லி, மே 9

இந்திரா காங்கிரஸின் திருப்பதி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை விதிக்கக் கோரும் பிரேரணையை சோனியா காந்தியின் ஆதரவாளர்களே கொண்டு வந்திருந்தனர் என்றும்— அதனாலேயே இத் தீர்மானம் மீது நடவடிக்கை எடுப்பதை பிரதமர் நரசிம்மராவ் தாமதித்து வருகின்றார் என்றும்— தமிழ் நாட்டில் உள்ள சோனியா காந்தி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தால் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசுக்கு கடும் அதிகாரங்கள் கிடைக்கும் என்று அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் நம்புகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## தமிழ் தம்பதியர் இருவர் நுகேகொடையில் கைது!

கொழும்பு, மே 9

நுகேகொடையில் வீடு ஒன்றில் தங்கியிருந்த இரண்டு தமிழ் தம்பதிகளை பொலீஸார் விசாரணைக்காகக் கூட்டிச் சென்றனர்.

அத் தம்பதிகள் மானிப்பாயைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது

அத் தம்பதிகளுக்கு தங்க இடமளித்ததாகக் கூறப்பட்ட இன்னொரு தம்பதியையும் பொலீஸார் விசாரணைக்காக கூட்டிச் சென்றனர்.

வெளியார் தங்க இடமளிக்கும் அவசர காலச் சட்டவிதிகளை இவர்கள் மீறியிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டா என்பதை அறிந்து கொள்ளு முகமாக இந்த இரண்டு தம்பதிகளும் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-எ]

## ரூ. 4 ஆயிரம் கொடுப்பனவு மீண்டும் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி திறன் முயற்சி நன்கொடையாக வழங்கப்பட்ட — நாலாயிரம் ரூபா கொடுப்பனவை — இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அதனை வழங்க புனர்வாழ்வு அமைச்சு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருக்கிறது

யாழ். மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 30 ஆயிரத்து 18 பேர் உற்பத்தித் திறன் முயற்சிக்கான நன்கொடையை பெறத் தெரிவாகியிருந்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு முற்பகுதி வரை வங்கிகள் மூலம் சுமார் 9 ஆயிரத்து இருநூற்று 91 பேருக்கு அந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தக் கொடுப்பனவை ஏனையவர்களுக்கும் வழங்க வேண்டும் என யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற புனர்வாழ்வு அமைச்சின் உயர் மட்டக் கூட்டம் ஒன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

## திருமலை ஆஸ்பத்திரியில் தாதி மீது தாக்குதல்!

### கண்டித்து டாக்டர்கள் வேலை நிறுத்தம்

திருகோணமலை அரசினர் வைத்தியசாலைத் தாதி ஒருவர் கடந்த செவ்வாய் இரவு மருத்துவமனைக்குள் வைத்து தாக்கப்பட்டார். இந்த தாக்குதலை கண்டித்து அங்கு கடமையாற்றும் டாக்டர்களும், தாதிமார்களும் மற்றும் ஏனைய ஊழியர்களும் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

பாம்பினால் கடியுண்ட சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமி ஒருத்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும் —

அச்சிறுமி மரணமானதைத் தொடர்ந்து கடமையில் இருந்த அந்த தாதி சிறுமியின் உறவினர்களால் தாக்கப்பட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது

பொலீஸார் தலையிட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதை அடுத்து புதன்கிழமை காலை வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. [இ-5]

## தாயகம் திரும்பிய அகதிகளுக்கு தரம் குறைந்த அரிசி விநியோகம்

கொழும்பு, மே 9

"தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு மிகவும் தரக் குறைவான அரிசி வழங்கப்படுகிறது. அதனால் அவர்களுக்கு வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு".

தமிழகத்தில் இருந்து திரும்பி வவுனியா - தாண்டிக்குளம், வேப்பங்குளம் அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த இரு அகதி முகாம்களிலும் சுமார் 600 குடும்பங்கள் தங்கி உள்ளன.

இதற்கிடையில் தமிழகத்தில் இருந்து திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள வவுனியா அகதி முகாமிற்கு வழங்கப்பட்டு வந்த தரக்குறைவான அரிசி விநியோகம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ-எ-3)

## வவுனியாவில் அடையாள அட்டை

கொழும்பு, மே 9

வவுனியாவில் நிரந்தரமாக வதிவோருக்கு இராணுவம் அடையாள அட்டைகளை வழங்கி வருகிறது.

கிராம சேவையாளர் பிரிவு வாரியாக இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும்—

விகாரைக்கு முன்பாக உள்ள பொலீஸ் நிலையத்தில் வைத்து அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ 3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று மணிவிழா

யாழ்ப்பாணம், மே 9

குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவரும் சித்திர பாட பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கலாகேசரி ஆ. தம்பித்துரையின் மணிவிழா இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற உள்ளது.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பரமேஸ்வரா கல்லூரி முன்னாள் அதிபர் எஸ். சிவபாதசுந்தரம் மணிவிழா நாயகனுக்கு விருது வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம், கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம், நல்லூர் பிரதேச செயலாளர் ஆ. மகாலிங்கம், செம்பியன் செல்வன் ஆகியோர் பாராட்டுரைகளும், யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா சிறப்புரையும் நிகழ்த்துவர்.

[அ-152]

## சிறையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, கே. எம். எம். பி. குலதுங்க, எஸ். டபிள்யூ. பி. வடுகொடப்பிட்டிய ஆகியோர் இந்த உத்தரவை விடுத்தனர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் ஜேசுராஜா தமது மனுவில் —

கடந்த செப்டெம்பர் 13ஆம் திகதி மன்னாரில் எனது தந்தையின் வீட்டில் தங்கி இருந்தபோது இராணுவத்தினர் காரணம் ஏதும் தெரிவிக்காமல் சட்டவிரோதமாக என்னைக் கைது செய்து கொண்டு சென்றனர் என்றும் —

அதன் பின்னர் பேசாலை, தள்ளாடி இராணுவ முகாம்களிலும் தற்போது தொடர்ந்து களுத்துறைச் சிறைச்சாலையிலும் என்னைச் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் சார்பில் சட்டத்தரணிகள் கல்யாணந்தஇரணகம, வி. எஸ். கணேசலிங்கம், பி. பத்மநாதன் ஆகியோர் உயர்நீதிமன்றில் ஆஜரானார்கள்.

[உ-3]


WANTED

Wanted a experienced Book Keeper. Apply With Complete bio-data. Salary negotiable

Box No: 405,
C/o UTHAYAN
Navalar Road, Jaffna.


மிரட்டியும் தொல்லை கொடுத்தும்

# தமிழகத்திலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் பலவந்தமாக அனுப்பப்படுகின்றனர்!

கொழும்பு, மே 9

தமிழகத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர் அங்கிருந்து பலவந்தமாக அனுப்பப்பட்டவர்களே.

இலங்கையில் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. இவ்வாறு அறிவித்தது.

கடந்த வாரங்களில் வந்த அகதிகள் இத்தகவலைத் தெரிவித்ததாகவும் பி.பி.ஸி. அறிவித்தது.

தமிழக முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு உணவு, உதவிகள் வழங்கப்பட மாட்டா என்று அச்சுறுத்தியும் —

பொலீஸாரின் தன்னை, கெடுபிடிகள் மூலம் அவர்களை மிரட்டியும் பலவந்தமாக திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொல்லைகளைத் தாங்க முடியாத அகதிகள் வேறுவழியின்றி இலங்கையின் வடக்கு, கிழக்கில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.

வாரம் தோறும் ஆயிரக்கணக்கில் அகதிகள் விமானம் மூலமும் கப்பல் மூலமும் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு திரும்பிய அகதிகள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது இடையில்உள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றார்கள்.

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து கூடிச் செல்வதால், இவ்வாறு இடை முகாம்களில் தங்க வைக்கப்படும் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது.

இந்நிலை தொடர்ந்தால் இலங்கையில் இடை அகதி முகாம்களில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை சமாளிக்க முடியாத நிலையை எட்டிவிடும் என்று மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்போதே இந்த முகாம்களில் சுகாதார வசதி, மருத்துவ உதவி போன்றவை இல்லை. இனியும் அகதிகள் வந்து குவிந்தால் நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்றும் அவர் கூறினார்.

[உ-5]

## இடை நிறுத்தம்

கொழும்பு, மே 9

குடியகல்வு, குடிவரவுத் திணைக்களத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளுக்கான பாஸ்போர்ட்களை சகல நாடுகளுக்கும் செல்லக்கூடியதாக விஸ்தரித்து அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை திணைக்களம் நிறுத்தி வைத்துள்ளது.

இச்சலுகையைப் பயன்படுத்திச் சிலர் போதைவஸ்துக் கடத்தல், போலிக் காசோலைகளை மாற்றுதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

[உ-எ]

## தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுப்பதற்காக சட்டசபையின் அவசரக் கூட்டத்தை நடத்தி செயலாளரை அனுப்ப மாட்டோம் என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது நீதிமன்ற அவமதிப்பாகும்'' — என்று கருத்து வெளியிட்டது.

உடனே சட்டமா அதிபர் எழுந்து, ''ஒரு வேளை நீதிமன்ற நோட்டீஸின் முக்கியத்துவத்தை சட்டசபை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ'' — என்று சொன்னார்.

இதனையடுத்து நீதியரசர் இராமசாமி. ''இவ்விவகாரத்தை இப்படியே விட்டு வைத்தால் ஒவ்வொரு சட்டசபையும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும்'' — என்றார்.

அக்கட்டத்தில் சட்டமா அதிபர் குறுக்கிட்டு —

'தமிழக சட்டசபை அத்தீர்மானத்தை இன்னும் பிடித்துக்கொண்டு நின்றால் அது நீதிமன்ற அவமதிப்பாகத்தான் ஆகும்'' — என்றார்.

அதனையடுத்து தமிழக சட்டசபை சபாநாயகர் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் நோட்டீஸ் அனுப்பி விசாரணையை ஆகஸ்ட் 11 ஆம் திகதி ஆரம்பிப்பது என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

கைது வாரண்டுகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவுகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என்றும் புதுடில்லி உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக நேற்று அறிவித்தது!

[உ-எ]

## மட்டக்களப்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தின.

உக்கிர குண்டு வீச்சுக்கு மத்தியில் இங்கிரியவெட்டையில் இருந்து சென்ற புலிகள் ஓர் அணியாகவும் —

மற்றோர் இடத்திலிருந்து வந்த விடுதலைப் புலிகள் இன்னோர் அணியாகவும் நின்று சுமார் ஒன்றரை மணி நேரம் தாக்குதல் நடத்தினர். கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாத படையினர் பின்வாங்கிச் சென்றனர். இந்தச் சம்பவத்தில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது சம்பவத்தில் —

கதிரவெளி கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இராணுவ அதிரடிப் படையினர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

மாலை 4 மணிமுதல் 5-30 மணிவரை — ஒன்றரை மணி நேரம் — தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவத்தினர் பெரும் இழப்புக்களுடன் முகாம் திரும்பினர். இந்தச் சம்பவத்தில் பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

இத்தாக்குதலின் போது பெறுமதிமிக்க பல ஆயுதங்களை இராணுவத்தினரிடம் இருந்து புலிகள் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஓ-எ-5]

# ஆயுத பலத்தினால் யுத்தத்தில் ஒருபோதும் வெல்லமுடியாது

## இப்படிக் கூறுகிறார் ஆரியரத்தின

கொழும்பு, மே 9

இன்றைய யுத்தத்திற்கான முக்கிய காரணம் என்ன என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாது இருந்து வருகின்றன. அதனால் ஏற்பட்ட விளைவே இந்த யுத்தம். இதனை ஒருபோதும் ஆயுத பலத்தினால் வெற்றி கொள்ள முடியாது.

சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன மாத்தறையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு பாதயாத்திரை செல்ல அரசாங்கம் எனக்கு அனுமதி வழங்கினால் ஆயுதம் ஏந்தாமல் நான் அங்கு செல்வேன். அங்கு நடைபெறும் யுத்தத்தை என்னால் நிறுத்த முடியும் — என்றும் அவர் சொன்னார்.

(ஒ-5)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா மாணிக்கம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா மாணிக்கம் 04-05-1992 இல் கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், சிற்செரூபன் (ரூபன்), உலகராணி (ராணி) யின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (குணம்), விஜயராணி ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்ற நடராசா, கந்தசாமி ஆகியோரின் சகோதரியும், பாக்கியம், புனிதவதி ஆகியோரின் மைத்துனியும், ஜெனனி, வசீகரன், ஜெபந்தினி, சிவகரன், சுவீதா, சுவீதர், றஞ்சித், தனு, சிந்துபாரதி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (09-05-1992) இல. 22, 8 ஆம் ஒழுங்கை, கொள்ளுப்பிட்டியில் நடைபெறும்.

தகவல்;
சி, குணரெத்தினம்.
[மருமகன்]

சுதுமலை அம்மன் கோவிலடி,
மானிப்பாய்.

(20895)

## Sister Flory Mann

இலங்கை பெந்தெகொஸ்தே சபை பிரதான சகோதரி Sister Flory Mann அவர்கள் 7 ஆம் திகதி மகிமைக்குள் பிரவேசித்தார். 12-05-92 செவ்வாய்க் கிழமையன்று மாலை 2.00 மணிக்கு மட்டக்குளி 11 ரொற்றிக்கோ பிளேசில் இலங்கை பெந்தேகொஸ்தே சபை சாலையில் அடக்க ஆராதனை நடைபெற்று அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக கனத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இலங்கை பெந்தேகோஸ்தே சபை
11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[20917]

## கணபதிப்பிள்ளை விசாலாட்சி

கணபதிப்பிள்ளை விசாலாட்சி காலமாகிவிட்டார். அன்னார் பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது 55/16, கல்லூரி ஒழுங்கை, நீராவியடியில் வசித்தவரும், கணபதி ஸ்ரோர்ஸ் ஸ்தாபகருமான சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பரஞ்சோதி, காசிநாதன், கந்தசாமி ஆகியோரின் தாயாரும், கற்பகவல்லி, லோகேஸ்வரி, விசயலெட்சுமி ஆகியோரின் மாமியுமாவார்.

பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [9-5-92] காலை 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. க. பரஞ்சோதி
[மகன்]

கணபதி ஸ்ரோர்ஸ்,
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்

(20918)


"ஷப்றா" கிண்ணத்துக்காக
ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்
7ஆவது வருடாந்த
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்
கிரிக்கெட் போட்டி

விண்ணப்ப முடிவு தினம் நாளை
போட்டி ஒழுங்குத் தெரிவு: 12 05-92 மாலை 5-00 மணி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org